தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்ட மன்றத்தின் ஐம்பத்தி இரண்டாவது கூட்டத்தொடர்.

வெள்ளிக்கிழமை, 1977, ஜூலை 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவ ானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. புதிய அமைச்சர்களுக்கும் மேலவை முன்னவருக்கும் வரவேற்பு.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> :—மாண்புமிகு உறுப்பினர்களே, பொதுத் தேர்தலுக்குப் பின் பொறுப்பேற்றிருக்கும் புதிய அமைச்சரவையைப் பாராட்டுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மன்றம் கடைசி முறையாக 1975-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் கூடி, நவம்பர் திங்கள் 11-ம் நாள் கலைந்தது. அதன்பின், இம் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தபடியால், இம்மன்றம் கூட இயலவில்லை. பொதுத் தேர்தல் நடந்தபின், புதிய அரசு அமைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவர்தம் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் எனது பாராட்டுக்கள். புதிய அமைச்சரவையையும், மாண்புமிகு உறுப்பினர்களையும், இந்த அவையின் கூட்டத் தொடரின் முதல் கூட்டத்திற்கு வரவேற்கிறேன். இந்த அவையில் முன்னவராக நியமிக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது, கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். இம்மன்றத்தை நல்ல முறையிலே நடாத்திச் செல்ல அவர்கள் தங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்க வேண்டுமென்று இச்சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வரவேற்பு

[மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்] [1977 ஜூலை 8

பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இந்த அவையில் கட்சிகளின் நிலைமை பெரிதும் மாறுபட்டுள்ளது. இருப்பினும், இந்த அவையைப் பொறுத்த வரையில், அரசுக்கு வழக்கம்போல் தனது ஒத்துழைப்பைக் கொடுப்பதில் எவ்விதமான சிரமமும் இருக்காது. ஒத்துழைப்பு, சேவை மனப்பான்மை, பிறரை மதிக்கும் பண்பு, விட்டுக்கொடுக்கும் தன்மை ஆகியவற்றில் இந்த அவை தனக்கென ஒரு கோட்பாட்டையும், பாரம்பரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவை உறுப்பினர்கள் இந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து, அதை மீண்டும் வளம்பெறச் செய்வார்கள் என்பதில் எனக்குச் சிறிதேனும் ஐயமில்லை. விவாதங்கள் நடத்துவதிலும், கருத்துக்கள் பரிமாறிக்கொள்வதிலும், விமர்சனங்கள் செய்வதிலும் இந்த அவையின் மதிப்பினை உயர்த்துவதிலும், பாரம்பரியத்தை மேலும் வளர்ப்பதிலும், மாண்புமிகு அமைச்சர்கள், உறுப்பினர்கள், மற்றும் பத்திரிகையாளர்கள், இவர்களுடைய ஒத்துழைப்பு எனக்கு என்றும் கிட்டும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

மீண்டும், இம்மன்ற உறுப்பினர்கள் சார்பிலும், என் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்தம் அமைச்சர்களுக்கும், எனது உளமார்ந்த பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு, இந்த அவை எப்போதும் உயர்ந்த பாரம்பரிய நெறிமுறைகளையும், மரபுகளையும் பேணிக் காப்பதில் வழுவாது செயல்படும் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS